# DEPOSITION OF WITNESS
## In the Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC.68/2018.** | | |
| **PW/DW/CW** | : | **PW3** | | |
| **Name** | : ரேணுகாதேவி | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( A1 present. Others absent u/s.317 CrPC petition filed and allowed.)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05.10.2023

---

**முதல் விசாரணை:**

1. நான் உசிலம்பட்டியில் சிவன்காளைதேவர் தெருவில் வசித்து வருகிறேன். புகார்தாரர் அசா.1 கவிதா எனது மகள் ஆவார். அசா.2 சக்கரபாணி எனது கணவர் ஆவார். நான் செவிலியராக பணிபுரிந்து பணிஓய்வு பெற்றுவிட்டேன். 10.02.2006ம் தேதி எனது மகள் அசா.1க்கும் 1வது எதிரிக்கும் உசிலம்பட்டி யுபிஎம் மகாலில் திருமணம் நடைபெற்றது. 1வது எதிரி அப்போது கப்பல்படையில் அந்தமானில் வேலை பார்த்து வந்தார். திருமணத்தின்போது எனது மகள் அசா.1க்கு 50 பவுன் நகையும், 1ம் எதிரிக்கு 5 பவுன் மற்றும் கட்டில், பீரோ, டிவி, பிரிஜ் உட்பட 2 லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்கள் செய்து வைத்தோம். 1ம் எதிரி அரக்கோணத்திற்கு பணிமாறுதல் பெற்று வந்தவுடன் எனது மகளை அரக்கோணத்திற்கு அழைத்து சென்றுவிட்டார். அரக்கோணத்தில் எனது மகள் கர்பமாக இருந்தபோது நாங்கள் வலைகாப்பு நடத்தினோம். வளைகாப்பிற்கு மற்ற எதிரிகள் யாரும் வரவில்லை. 2009ம் ஆண்டு எனது மகளுக்கு முதலாவது குழந்தை பிறந்தது. எதிரிகள் யாரும் குழந்தையை பார்க்க வரவில்லை. பின்பு எனது மகளையும் முதல் குழந்தையையும் அரக்கோணத்தில் சென்று விட்டுவிட்டு வந்தோம். அதன்பின்பு 1ம் எதிரி மதுரவாயலுக்கு பணிமாறுதல் பெற்று அங்கு புகார்தாரரையும் குழந்தையையும் அழைத்து சென்றார். எனது மகள் இரண்டாவது குழந்தை பிரசவத்திற்காக எங்களது வீட்டிற்கு வந்திருந்தார். அங்கு எதிரிகள் யாரும் பார்க்க வரவில்லை. எங்கள் வீட்டிற்கு 1,2,3,4,5 எதிரிகள் அனைவரும் வந்து 100 பவுன் நகை, 5 லட்சம் பணம் மேலும் நானும் எனது கணவரும்

வாங்கும் பென்சன் தொகையில் யாராவது ஒருவருடைய பென்சன் பணம் வேண்டும் என்று எங்களிடம் கேட்டார்கள். கொடுத்தால் தான் எங்கள் வீட்டிற்கு வரவேண்டும் என்றும் ஆண் குழந்தை இல்லாத காரணத்தை சொல்லி 1ம் எதிரியின் அம்மா 1ம் எதிரிக்கு வேறு திருமணம் செய்து வைக்க போவதாகவும் சொன்னார். மேலும் எதிரிகள் எங்களை திட்டி அடிக்க வந்தார்கள். அதனை தொடர்ந்து நாங்கள் காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். குழந்தைகள் பிறந்தபின்னர் எனது மகள் குழந்தைகளுடன் எங்கள் வீட்டில் தான் இருந்து வருகிறார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

**2.** எனது மகள் திருமணத்திற்கு 50 பவுன் மற்றும் 2 லட்சம் சீர்வரிசை பொருட்கள் கொடுக்கவில்லை என்றும் அது எதுவும் எதிரிகளிடம் இருக்கவும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி பணிஓய்வு பெற்று விசாகப்பட்டினத்தில் பணத்துடன் திரும்பி வந்தபோது அங்கு நானும் எனது கணவரும் இருந்தோம் என்றால் சரியல்ல. 1ம் எதிரி ஓய்வுபெற்ற பணத்தில் ஒரு பகுதியை செலவழித்து புகார்தாரருக்கு விலை உயர்ந்த நகை மற்றும் பொருட்களை வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. நானும் எனது மகளும் 1ம் எதிரியிடம் ஓய்வு பெற்ற முழுபணத்தையும் என் மகளிடம் கட்டாயப்படுத்தி ஒப்படைக்க சொல்லி பிடுங்கி கொண்டு 1வது எதிரியை வீட்டைவிட்டு வெளியேற்றினோம் என்றால் ˙சரியல்ல. 1ம் எதிரி உணவிற்கும் தங்குவதற்கும் வழியில்லாமல் அவரது மனைவியான புகார்தாரரிடம் சொல்லிவிட்டுதான் ஊருக்கு வந்தார் என்ற்ால் சரியல்ல. நாங்கள் வேண்டுமென்றே விசாகப்பட்டினத்தில் பொய்யாக புகார் அளித்தோம் என்றால் சரியல்ல. திருமணத்தின்போது நாங்கள் போட்ட நகை மற்றும் சீர்வரிசை பொருட்கள் மற்றும் 1ம் எதிரி ஓய்வுபெற்ற பணபலன்கள் அனைத்தும் எனது மகளிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. 1 முதல் 5 எதிரிகள் எங்கள் வீட்டிற்கு வந்து பிரச்சினை செய்ததாக சொல்வது எந்த தேதி என்றால் தேதி ஞாபகம் இல்லை. அது காலையா அல்லது மாலையா என்றால் காலை நேரம் மட்டும் தான் தெரியும். நானும் எனது மகளுடன் உசிலம்பட்டி காவல் நிலையம் சென்றேன். புகாரை மகளிர் காவல் நிலையத்தில் வைத்து அங்கிருந்த ஒரு நபர் மூலம் எழுதிக்கொடுத்தோம். புகார் கொடுத்த அன்றே 1 முதல் 5 எதிரிகளை உசிலம்பட்டி காவல் நிலையத்தில் வரவழைத்து விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். 1 முதல் 5 எதிரிகள் வழக்கறிஞர் மூலம் நிலைய ஜாமினில்

சென்றார்கள். எதிரிகள் யாரும் என் வீட்டிற்கு சம்பவதினத்தில் வரவும் இல்லை, என் மகளிடம் 100 பவுன் நகை, 5 லட்சம் ரொக்கம் மற்றும் என் பென்சனில் பாதி ஆகியவற்றை கேட்கவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நானும் அசா.1ம் வழக்கிற்காக திட்டமிட்டு பொய் சொல்கிறோம் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன இடத்தில் சொன்னமுறையில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவய சமயத்தில் நானும், என் கணவர், என் மகள் மற்றும் எதிரிகளை தவிர வேறு யாரும் அங்கு இல்லை. நான் உண்மை நிலையை மறைத்து எனது மகளுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S.d./ Renukadevi

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.